# குறுக்குவிசாரணை

| | | |
|---|---|---|
| **வழக்கு எண்** | :- | **O.S.No.193/2015** |
| **வாக்குமூலம் அளிக்கும் சான்றாளர்** | :- | **வா.சா-01 (PW-01 )** |
| **பெயர்** | :- | **பெரியசாமி** |
| **தேதி** | :- | **23-06-2025** |

**சான்றாளர் மீண்டும் அழைக்கப்பட்டார். சான்றாளருக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.**

**குறுக்குவிசாரணை :-**

நான் தமிழ்நாடு காவல் துறையில் சிறப்பு உதவி ஆய்வளாராக பணிபுரிகிறேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் 10 ஆம் பிரதிவாதியை தவிர மற்ற பிரதிவாதிகள் தோன்றாத் தரப்பினர்களாக உள்ளனர் என்றால் சரிதான்.

என்னுடைய தந்தைவழி பாட்டனாரின் பெயர் மாரிமுத்து என்கிற முத்துசாமி என்றால் சரிதான். முத்துசாமிக்கு பெரமகவுண்டர், பெரியதம்பி, பரமசிவம் என்கிற 3 மகன்கள் என்றால் சரிதான். என்னுடைய தகப்பனார் பெரமகவுண்டர். பெரமகவுண்டர் 1997 ஆம் ஆண்டு இறந்தார் என்றால் சரிதான்.

நான் உட்பட இந்த வழக்கின் வாதிகள் அனைவரும் இந்த வழக்கின் வழக்குச் சொத்தை பொறுத்து சேலம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் முதலேற்பு வழக்கு எண்.1031/2007 என்ற வழக்கை பாகப்பிரிவினை கோரி இந்த வழக்கின் 1 முதல் 6 வரையிலான பிரதிவாதிகள்மீது தொடுத்தோம்

என்றால் சரிதான். இருவழக்குகளையும் மற்ற வாதிகளுக்காக நான்தான் நடத்துகிறேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் இந்த வழக்கின் 10 ஆம் பிரதிவாதி உரிய மனு தாக்கல் செய்து தன்னை பிரதிவாதியாக இணைத்துக் கொண்டார் என்றால் சரிதான். அந்த முந்தைய வழக்கு 07.10.2010 ஆம் தேதியன்று தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த வழக்கு தள்ளுபடி ஆகிவிட்ட சங்கதி எனக்கு தெரியும் என்றும் வேண்டுமென்றே பொய் சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

அதே சொத்திற்கு மீண்டும் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். ஜெயவேல் என்பவரை தெரியும். பக்கத்து நிலத்துக்காரர். ஜெயவேல் என்பவர் இந்த வழக்கில் 1 முதல் 6 வரையிலான பிரதிவாதிகள்மீது வழக்குச் சொத்தில் புல எண்.198/1 இல் அடங்கிய நிலத்தை பொறுத்து ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கோரி வழக்கு தொடுத்து அது தள்ளுபடி ஆகிவிட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் அந்த விவரம் எதுவும் எனக்கு தெரியாது.

இந்த வழக்கின் 10 ஆம் பிரதிவாதி எதிர்வழக்குரையில் என்ன சொல்லியுள்ளார் என்று எனக்கு தெரியும். அந்த எதிர்வழக்குரையில் மேற்சொன்ன இரு வழக்குகள் பற்றி 10 ஆம் பிரதிவாதி சொல்லியுள்ளார் என்றால் சரிதான். அதை மறுத்து கூடுதல் வாதுரை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

03.12.1969 ஆம் தேதியன்று என்னுடைய தாத்தா மாரிமுத்து என்கிற முத்துசாமியும் அவருடைய 3 மகன்களும் வழக்குச் சொத்தின் ஒருபகுதியை துரைசாமிபிள்ளை என்பவரிடம் அடமானம் வைத்து 7 ஆயிரம் உரூபாய்

கடன் வாங்கினார் என்று சொன்னால் கேள்விபட்டு இருக்கிறேன். துரைசாமிபிள்ளை ராஜமாணிக்கம்பிள்ளை என்பவரிடம் அடமான கடன் பெற்றுக்கொண்டு அந்த அடமானத்தை மேலெழுதி கொடுத்தார் என்றால் அவ்வாறு கேள்வி பட்டிருக்கிறேன்.

கடன் அடைக்கப்படாததால் ராஜமாணிக்கம்பிள்ளை என்னுடைய தாத்தா உள்ளிட்டோர்மீது அடமான சொத்தின்மீது வழக்கிட்டு 21.04.1982 ஆம் தேதியன்று முதல்நிலை தீர்ப்பாணை பெற்றார் என்றால் கேள்வி பட்டிருக்கிறேன். அந்த நடவடிக்கையில் இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டு அதன்மீது தாக்கல் செய்யப்பட்ட நிறைவேற்று மனு எண்.165/1984 நடவடிக்கையில் அடமானத்திற்கு நீதிமன்ற ஏலத்தில் 27.09.1984 ஆம் தேதியன்று விற்கப்பட்டது என்றால் அவ்வாறு கேள்வி பட்டிருக்கிறேன். அதனால் கூட்டுக் குடும்ப சொத்து என்ற தன்மை அந்த சொத்திற்கு இல்லை என்று சொன்னால் சரியல்ல.

அதே நடவடிக்கையில் என்னுடைய சித்தப்பா பெரியதம்பியும் 7 ஆம் பிரதிவாதி பரமசிவமும் உரிய மனு தாக்கல் செய்து ஏல தொகையை செலுத்தி சொத்தை விடுவித்துக் கொண்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. நாங்களும் பணம் கொடுத்தோம். மேற்சொன்ன வழக்கு நடவடிக்கை குறித்து நான் என் வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

13.02.1985 ஆம் தேதியன்று வழக்குச் சொத்தின் மற்றொரு பகுதியை பொறுத்து ராமசாமி மகன் கோவிந்தனிடம் இருந்து பெரியதம்பியும் பரமசிவமும் கிரயம் வாங்கினார்கள் என்று சொன்னால் எங்களுக்கு தெரியாமல் வாங்கிவிட்டார்கள். அந்த சொத்தை இந்த வழக்கில் சேர்க்கவில்லை.

இந்த வழக்கில் மொத்தம் 6 இன சொத்துக்களை சேர்த்துள்ளேன். வழக்குச் சொத்துக்களையும் இதர சொத்துக்களையும் பொறுத்து 01.07.2004 ஆம் தேதியன்று பெரியதம்பியும் பரமசிவமும் பத்திரம் மூலம் பாகப்பிரிவினை செய்துகொண்டனர் என்று சொன்னல் அதுபற்றி எனக்கு தெரியாது. 2009 ஆம் ஆண்டு தெரியவந்தது. அந்த பாகப்பிரிவினை பத்திரத்தில் அ அட்டவணை சொத்து பெரியதம்பிக்கும் ஆ அட்டவணை சொத்து பரமசிவத்திற்கும் ஒதுக்கப்பட்டது என்றும் அந்த சங்கதி எனக்கு தெரியும் என்றும் சொன்னால் சரியல்ல.

வழக்கு 1, 3, 5 ஆம் இன சொத்துக்களையும் இதர சொத்துக்களையும் 10 ஆம் பிரதிவாதி 1 முதல் 6 வரையிலான பிரதிவாதியிடமிருந்து கிரயம் வாங்கியுள்ளார் என்று சொன்னால் சரிதான். அதில் பாதி சொத்து எங்களுடையது. அவர் வாங்கிய சொத்துக்களில் தொழிற்சாலை வைத்துள்ளார் என்றால் இல்லை. அவர் வாங்கிய சொத்துக்கள் அவருடைய அனுபோகத்தில் உள்ளது என்றால் சரிதான். எங்களுடைய அனுபோகத்திலும் உள்ளது. 10 ஆம் பிரதிவாதி சிறுநீரக அறுவைசிகிச்சை நிபுணர் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது.

வழக்குச் சொத்து சம்மந்தமாக எங்களுக்கு உரிமையுள்ளது என்று காட்ட ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வழக்குரைஞரிடம் கொடுத்துள்ளேன். 2007 ஆம் ஆண்டுவரை உள்ள ஆவணங்களை கொடுத்துள்ளேன். நான் அவ்வாறு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றும் அதுபோன்றதொரு ஆவணம் எதுவும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.

வழக்குச் சொத்தை பொறுத்து ஏற்பட்டுள்ள உரிமை மாற்றங்கள் எதுவும் செல்லாது என்பதுதான் எங்களுடைய வழக்கு என்றால் சரிதான். அந்த ஆவணங்கள் செல்லாது என்று விளம்புகை பரிகாரம் எதுவும் கோரவில்லை என்றால் சரிதான். நான் வழக்குச் சொத்தின் கூட்டுச் சுவாதீனத்தில் இல்லை என்றால் சரியல்ல. நான் கூட்டுச் சுவாதீனத்தில் இருப்பதாக குறிப்பிட்டு வழக்கை மதிப்பீடு செய்ததும் நீதிமன்ற கட்டணம் செலுத்தியதும் தவறு என்றால் சரியல்ல.

வழக்குரையில் கோரியுள்ள பரிகாரம் எதையும் பெறுவதற்கு எனக்கோ பிற வாதிகளுக்கோ உரிமை இல்லை என்றால் சரியல்ல. ஏற்கனவே நாங்கள் வழக்கு தாக்கல் செய்து தவறுகைக்காக விட்டுவிட்டு மீண்டும் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளது செல்லாது என்று சொன்னால் சரியல்ல. எங்களுடைய வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. நாங்கள் வேண்டுமென்றே 10ஆம் பிரதிவாதியை அலைகழிக்கிறோம் என்றால் சரியல்ல.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.